## மோசடி எச்சரிக்கை!

பெருநிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்குவது சார்ந்த மோசடிகள் தற்போது எங்கும் பரவி ஏராளமாக அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. அதில் சில மோசடிக்காரர்கள் வேலை தேடும் அப்பாவி மனிதர்களை தொடர்பு கொண்டு, எங்களது குழு நிறுவனங்களில் கவர்ச்சிகரமான ஊதியத்துடன் கூடிய வேலைகளை வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்துவரும் ஒரு செயல்பாட்டை, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடட் மற்றும் அதன் குழு நிறுவனங்களில் நாங்கள் கண்டு வருகிறோம். சாத்தியக்கூறுள்ள ஒரு விண்ணப்பதாரரின் நம்பிக்கையை பெற்றவுடன், இந்த மோசடிக்காரர்கள் பணி நியமனத்திற்கு அல்லது நேர்காணலுக்கு முன்பாக கட்டாயமாகத் தேவைப்படுகிற மாதிரி பல நிபந்தனைகளைக் குறிப்பிட்டு ஒரு குறிப்பிட்ட வங்கிக்கணக்கில் பணத்தைச் செலுத்துமாறு சொல்கிறார்கள்.

- **இது இப்படித்தான் செயல்படுகிறது**: வேலை நாடுபவருக்கு சந்தேகம் எழாமல் இருக்கும் பொருட்டும் அவரை மோசடி வலைக்குள் இழுப்பதற்கும் முதன் முதலில் கேட்கப்படும் தொகை பொதுவாக மிக குறைந்த அளவிலேயே இருக்கும்

- இலக்கு வைக்கப்பட்ட நபரின் ஆர்வத்தைப் பொறுத்து, பணிநியமன நாள் அல்லது நேர்காணல் நாள் நெருங்க நெருங்க அந்த **மோசடிக்காரர் தொகையை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிப்பார்.**

- **உதாரணத்திற்கு, லேப்டாப் போன்ற ஒரு ஸ்டார்ட்-அப் டூல்கிட் வழங்குவதாகக் கூறி** ஒரு பெரும் தொகை கோரப்படுகிறது..
- பணம் தவிர, விண்ணப்பத் தேவைகளை நிறைவேற்ற, வேலை நாடுபவர்களிடமிருந்து அவர்களின் **தனிப்பட்ட தகவல்களையும்** இந்த மோசடிக்காரர்கள், பெறுவதாக கேள்விப்படுகிறோம்.

  பெரும்பாலும் அந்தத் தரவுகள் பிற்பாடு சந்தையில் விற்கப்படுகின்றன.

  **ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் அதன் குழு நிறுவனங்கள் இந்த மோசடி எச்சரிக்கை மூலமாக வேலை நாடும் சாத்தியக் கூறுள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை அறிவிப்பை அளிக்க விரும்புகிறது.:**

  - **பணி நியமனம் மற்றும் நேர்காணல் அல்லது லேப்டாப்/ சீருடை வழங்குவது, வைப்புத் தொகை, COVID சோதனைக்குக் கட்டணம் போன்றவற்றுக்காக, வேலை தேடுபவர்களிடமிருந்து எந்த ஒரு கட்டணமோ அல்லது வைப்புத் தொகையோ கேட்கப்படுவதில்லை**

  - **பணிநியமனம் செய்வதற்கு அல்லது அதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு அதன் சார்பாக எந்த ஒரு முகவரையோ, ல்லது தனிநபரையோ நியமிப்பதில்லை.**

  - **மதிப்பெண் சான்றிதழ், பான் அட்டை, ஆதார் அட்டை, சுய விவர விண்ணப்ப படிவம் போன்ற எந்த ஒரு ஆவனத்தையும் வாட்ச்அப் அல்லது ஆன்லைன் படிவம் மூலமாக பகிர்ந்து கொள்ளச் சொல்லப்படுவதில்லை.**

- **ஜிமெயில், யாஹூ, ஹாட்மெயில், அவுட்லுக் போன்ற எந்த ஒரு தனிப்பயன்பாட்டு மின் அஞ்சல் முகவரிகளைப் பயன்படுத்தி தொடர்பு கொள்ளாது. பணி நியமனம் தொடர்பான அனைத்து தகவல் தொடர்புகளும் " @ril.com, @jiobp.com " என்று முடிவடையும் ஒரு மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்தியே நடைபெறும்.**

அந்த வகையைச் சேர்ந்த முகைமை, முகமை யமன இணைய முகப்பு அல்லது தனிநபர்களை தொடர்பு கொள்ளும் வேலை தேடும் எந்த ஒரு நபரும் அவரது சொந்த விருப்பத்தின் பேரிலேயே ஆபத்தை எதிர்கொள்கிறார், மற்றும் அதன் மூலம் விளையக்கூடிய எந்த ஒரு பாதிப்புக்களுக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் அதன் குழு நிறுவனங்கள் பொறுப்பேற்காது.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ரீடெய்ல் அல்லது JIO ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலமாக வேலை தேடுபவர் தங்கள் வேலை நியமன கடிதத்தின் நம்பகத்தன்மையை சரிபார்க்கலாம்.

சந்தேகப்படும்படி, மோசடியான வழிகளில் ஆட்சேர்ப்பு நடப்பது தெரியவந்தால், நாம் இருவருமே பயன்பெறத்தக்க வகையில் Head – Fraud & Misconduct Investigations அவர்களுக்கு recruitment.fraud@ril.com என்ற முகவரியில் புகார் அளிக்க வேண்டும்.